Dinamani,dt:30.9.25,pg.no.2

# அவினாசிலிங்கம் உயர்கல்வி நிறுவனத்தில் கலாசார கலை விழா



கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் கலாசார கலை விழாவை திங்கள்கிழமை தொடங்கிவைத்துப் பார்வையிட்ட சிறப்பு விருந்தினர்கள்

**கோவை, செப்.29:** கோவை அவினாசிலிங்கம் மனைவியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் கலாசார கலை விழா திங்கள்கிழமை தொடங்கியது.

கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் சமகால இந்தியாவுக்கான இந்திய கலாசார விழுமியங்கள் என்ற கருப்பொருளில் கலை விழா நடத்தப்படுகிறது. இந்த விழாவில் மாணவிகள் கிளப் செயல்பாடுகளின் கண்காட்சியை வேந்தர் டி.எஸ்.கே.மீனாட்சிசுந்தரம் தொடங்கிவைத்தார்.

பெட்டல்ஸ் மலர்க் கடையின் உரிமையாளர் ஜெயந்தி சந்தோஷ், கோவை சர்தார் வல்லபபாய் படேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மைப் பள்ளியின் இயக்குநர் பி.அல்லிராணி, தமிழ்நாடு கைவினை மன்றத்தின் பொருளாளர் லட்சுமி ராமச்சந்திரன், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இயக்குநர் வைஷ்ணவி கிருஷ்ணன் ஆகியோர் முறையே மலர் அலங்காரக் கண்காட்சி, கொலுக் காட்சி, இந்திய மற்றும் சர்வதேச பொம்மைகளின் கலை விளக்கக் காட்சி, காதி சுதந்திரத்தின் இலை என்ற தலைப்பில் ஜவுளிக் கண்காட்சி, அன்னம் பிரம்மா என்ற பாரம்பரிய சமையல் கண்காட்சி ஆகியவற்றைத் தொடங்கிவைத்தனர்.

முன்னதாக, துணைவேந்தர் வி.பாரதி ஹரிசங்கர் பேசியதாவது: நிறுவனத்தில் கலை விழா என்பது மாற்றத்துடன் கூடிய திருவிழாவாகும். இந்த விழாவானது நிறுவனர் மற்றும் முன்னோடிகளால் வடிவமைக்கப்பட்ட ஒரு கலாசார விழா எவ்வாறு தொடங்கி வளர்ந்துள்ளது என்பதையும் எடுத்துரைத்தார். இந்த விழாவில், பேராசிரியர்கள், மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.